அருட்தந்தை ஸ்டேன் சாமி அவர்களின் கைதைக் கண்டித்து

தமிழக இயேசு சபையினர் மற்றும் தோழமை அமைப்புகள் வெளியிடும்

பத்திரிக்கைச் செய்தி

நாள்: 12 அக்டோபர் 2020

ஆதிவாசி மற்றும் தலித் மக்கள் உரிமைகளுக்காகப் போராடிய 83 வயதான அருட்தந்தை ஸ்டேன் சாமி அவர்களை தேசிய புலனாய்வு அமைப்பு அக்டோபர் 8-ம் தேதி ஜார்கன்ட் மாநிலம் ராஞ்சியில் இரவில் கைது செய்ததை தமிழக இயேசு சபையினர் மற்றும் தோழமை அமைப்புகள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதன்மூலம் அவரது தியாகப் பணிகள் அவமதிக்கப்பட்டுள்ளன.

அருட்தந்தை ஸ்டேன் சாமி அவர்கள் தமிழ்நாட்டில் பிறந்து உலகம் முழுவதும் கல்விப்பணியில் சமூகப்பணியில் சிறந்த பணிசெய்துவரும் இயேசு சபையில் இணைத்து பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தில் ஆதிவாசிகள் மற்றும் தலித் மக்கள் மத்தியில் கடந்த 50 ஆண்டுகளாக அற்பணிப்போடு பணி செய்துவந்தார்.

அருள்தந்தை ஸ்டான் சுவாமி ஆதிவாசி பகுதிகளான பீகார், ஜார்கண்ட் போன்றவற்றை தனது இரண்டாவது பிறப்பிடமாக கருதி வாழ்ந்து வந்தார். அங்கு நிலவிய சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், ஆதிவாசிகள், தலித்மக்கள் சுரண்டப்படுவதையும், இயற்கை வளங்கள், அரசாங்கங்கள் மூலமாக சுரண்டப்படுவதையும் மக்கள் அவருடைய சொந்த நிலத்திலிருந்தே விரட்டப்படுவதையும் ஆய்வு செய்து எழுதிவந்தார். ஆதிவாசி மக்களுக்கு இந்திய அரசியலமைப்பு சட்டமும் மற்ற சட்டங்களும் கொடுத்திற்க்கும் உரிமைகளை மக்களுக்கு எடுத்து சொல்லி அவர்களை ஒருங்கிணைத்து வந்தார். அவர் வாழ்நாள்முழுவதும் சட்டத்தை மதிப்பவர்களாகவும், அரசியல் சட்ட மதீப்பீடுகளையும், உரிமைகளையும் கடைபிடிப்பவராகவும், எடுத்து சொல்பவராகவும் இருந்துவந்தார்.

மஹராஸ்டிரா மாநிலம் பீமா-கோரேகான் வழக்கில் இவர் பொய்யாக சேர்க்கபட்டுள்ளார். காரணம் ஜார்கண்ட் மாநிலத்தில் அன்றய அரசின் ஆதரவோடு நிலத்தை ஆக்கிரமித்தவர்கள் இயற்கையைச் சுரண்டியவர்களில் கனவுகள் தவிடுபொடியானதற்கு இவர்தான் காரணம் என்று கருதி தேசிய புலனாய்வு அமைப்பு சூழ்ச்சி செய்து இந்த வழக்கில் சிக்க வைத்துள்ளது.

துவகத்தில் பீமா-கோரேகான் வழக்கை விசாரித்த மஹராஸ்டிரா காவல்துறை சந்தேகப்படும் நபராக கருதி ஜார்கண்ட் ராஞ்சியில் இவர் வாழ்ந்த இடத்தை 28 ஆகஸ்ட் 2018 மற்றும் 12 ஜீன் 2019 ஆகிய தேதிகளில் அதிரடியாக

சோதனையிட்டது. அதற்கு அவர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார். அதன்பிறகு இந்த வழக்கு தேசிய புலனாய்வு அமைப்பிற்கு மாற்றப்பட்டது. கொரோனா ஊரடங்கு காலத்திலும் ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் 5 முறை சுமார் 15 மணிநேரம் தேசிய புலனாய்வு அமைப்பினால் விசாரிக்கப்பட்டார். அதற்கு தனது முழு ஒத்துழைப்பைக் கொடுத்தார். அவ்விசாரணையின் போது பீமா-கோரேகான் வழக்கிற்கும், மாவோயிஸ்ட் அமைப்புகளுக்கும் எந்த தொடர்பும் இல்லையென்பதை ஆணித்தனமாக எடுத்துரைத்தார். அவர்கள் காட்டிய ஆதாரங்கள் ஜோடிக்கப்பட்டவை என்று சுட்டிக்காட்டினார். கடந்த அக்டோபர் 6 ம் தேதி மும்பையில் உள்ள தேசிய புலனாய்வு அலுவலகத்தில் ஆஜராக வேண்டுமென்று அழைப்புவிடுத்தனர். இவருக்கு வயது 83 என்பதாலும், பார்கின்சன் நோயினால் அவதிப்படுவதாலும் கொரோனா காலத்தில் ஜார்க்கண்ட் அரசு 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் வெளியில் பயணம் செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டிருந்ததாலும் தன்னால் மும்பைக்கு வர இயலாது என்று தெரிவித்து வீடியோ கான்பிரன்ஸ் மூலமாக விசாரணை நடத்தினால் அதற்குத் தயார் என்று கூறியுள்ளார். ஆனால் இவற்றையெல்லாம் தேசிய புலனாய்வு அமைப்பு உதாசினப்படுத்திவிட்டது.

கடந்த அக்டோபர் 8 ம் தேதி இரவு 7.30 மணியளவில் அதிரடியாக அருட்தந்தை ஸ்டான் சுவாமி தேசிய புலனாய்வு அமைப்பினால் கைது செய்யபட்டார். விமான மூலமாக இரவோடு இரவாக மும்பைக்கு அழைத்துச்செல்லபட்டார். விமான மூலமாக இரவோடு இரவாக மும்பைக்கு அழைத்து செல்லபட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தேசிய புலனாய்வு அமைப்பின் இந்த நடவடிக்கைகளை கூர்ந்து நோக்கும் போது இந்த நிகழ்வை பரபரப்பானதாக மாற்ற முயற்சியித்துள்ளனர் என்பத தெரிய வருகிறது. இந்த நேரத்தில் ஜெயில் என்பது தவிர்க்கப்பட வேண்டியது. ஜாமீன் என்பது தவிர்க்கமுடியாத விதி என்று முன்னால் உச்சநீதிமன்ற நீதிபதி ஏ.சு. கிருஸ்ண அய்யர் ஒரு வழக்கில் குறிப்பிட்டதை எல்லோருக்கும் நியாபகப்படுத்திக்கொள்கிறோம். ஆதிவாசி மக்களுக்காக, தலித்மக்களுக்காக தன்னலம் இல்லாமல் உழைத்த அருள்தந்தை ஸ்டான் சுவாமி அவர்களைக் கைது செய்திருப்பது அராஜகமானது என்று கருதுகிறோம். அதே நேரத்தில் அரசு அரசியலமைப்பு சட்டத்தின் மதீப்பீடுகளையும், அடிப்படை உரிமைகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் புறம்தள்ளுவது வேதனைக்குறியதாக இருக்கிறது. இந்தப் பின்னனியில் கைது செய்யப்பட்டுள்ள அருள்தந்தை ஸ்டான் சுவாமி அவர்களையும் மனித உரிமையின் பாதுகாவலர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நமது நாடு **“தடா , போட்டா”** போன்ற கொடுமையான கருப்புச் சட்டங்களை கடந்த காலத்தில் பார்த்திருக்கிறது. அவையெல்லாம் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றவண்ணம் பயன்படுத்தப்பட்டதால் எதிர்ப்புகள் எழுந்தபோது அச்சட்டங்கள் நீக்கப்பட்டுவிட்டன. அருள்தந்தை ஸ்டான் சுவாமி அவர்களும் மற்ற மனித உரிமை பாதுகாவலர்களும் சட்ட விரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின்

படி (U.A.P.A) கைது செய்யப் பயன்படுத்தபட்டுள்ள சட்ட விரோத செயல்பாடுகள் தடுப்பு சட்டமும் தடா, போட்டா போன்ற சட்டங்களுக்கு இணையானதே. எனவே இந்த சட்டத்தை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அரசு வரலாற்றிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ள தவறக் கூடாது ஏனென்றால் வரலாறு மிகப்பெரிய ஆசிரியை.

அருள் தந்தை ஸ்டான் சுவாமி அவர்கள் ஆதிவாசி, தலித் மக்களுக்கு செய்த பணிகளையும் அதனால் ஏற்படும் சவால்களையும், சங்கடங்களையும் அவர் துணிச்சலோடு ஏற்றுக்கொள்வதையும் நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். இந்தப் பிரச்சனையில் அவருக்கு ஆதரவுக்கரம் நீட்டும் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெளியீடு : தமிழக இயேசு சபை

மற்றும் தோழமை அமைப்புகள்